1980 பிப்ரவரி 11]

திருச்செந்தூர் ஆலயத்திற்கு வெள்ளித் தேர்.

* வினா எண். 105 திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்செந்தூர் ஸ்ரீசுப்பிரமணியசுவாமி ஆலயத்திற்கு வெள்ளித் தேர் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் சுத்த வெள்ளிக்குப் பதிலாக கலப்படம் செய்து தேர் செய்யப்பட்டுள்ளது என்பது அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில் சம்பந்தப்பட்டவர் மீது அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) வெள்ளியில் கலப்படம் செய்ததாக புகார் ஏதும் இல்லாத போதிலும், அறநிலையத்துறையின் நகை சரிபார்க்கும் அதிகாரி, அவரது வைர நுண்ணறிஞர் மற்றும் திருநெல்வேலி நகை வியாபாரிகள் சங்கத்தினால் அனுப்பப்பட்ட ஒருவர், ஆகிய மூவரைக் கொண்டும் இந்த வெள்ளித்தேர் சமீபத்தில் பரிசீலிக்கப்பட்டு, மேற்படி தேர் செய்வதற்கு சுத்தமான வெள்ளிதான் உபயோகிக்கப்பட்டிருக்கிறது என்றும் கலப்படம் ஏதுமில்லை என்றும் தெரிய வந்தது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. அமிர்தராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு வெள்ளித் தேர் செய்யப்பட்டிருக்கிறது. அது சுத்தமான வெள்ளிக்குப் பதிலாக கலப்படமான வெள்ளியால் செய்யப்பட்டிருப்பதாக பொதுமக்கள் புகார் சொல்லுகிறார்கள். அதைக் கண்டுபிடிப்பதற்காக இந்த அரசு ஒரு குழு அமைத்து விசாரிக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்து பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட நிபுணர்கள் அதைப் பரிசீலித்துத் தெரிவித்து இருக்கிறார்கள். அதைப் பற்றிய குறிப்பான குற்றச்சாட்டுக்கள் ஏதேனும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்தில் இருந்து தெரிவித்தால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்கும்.

[1980 பிப்ரவரி 11

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, ஒரு வேளை சோற்றுக்குக் கூட வழியில்லாமல் கோடிக்கணக்கான மக்கள் நம் நாட்டிலே பரிதவிக்கிறபோது வெள்ளியிலே சாமிக்குக் கொண்டு போய் தேர் செய்வது என்பது ஊதாரித்தனமான ஒரு செலவு அல்லவா, ஏன் மரத்திலே செய்தால் அந்தத் தேர் ஓடாதா? அல்லது சாமிதான் மறுக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதத்தின் மீது நம்பிக்கை வைத்திருப்பவர்கள் மனம் புண்படாத அளவுக்குக் கேளுங்கள். ஊதாரித்தனம் என்று சொன்னால் பக்தர்கள் மனம் புண்படும்.

திரு. ரா. உமாநாத்: எக்ஸ்ட்ராவேகன்ட் எக்ஸ்பெண்டிச்சர் என்பதன் மொழிபெயர்ப்புத்தான் இந்த ஊதாரித்தனம் என்பது. என் மனதும் புண்படுகிறதே, தேரைப் பார்த்தால்.

We are equals. Theists and atheists are equals அவர்கள் மனம் புண்படக் கூடாது என்றால் என் மனமும் புண் படக் கூடாது. எக்ஸ்ட்ராவேகன்ட் எக்ஸ்பெண்டிச்சர்தான். அந்தத் தேர் வெள்ளியில்தான் செய்யப்பட வேண்டுமா? மரத்தால் செய்தால் ஓடாதா? மரத்தால் செய்த தேரில் சாமி சவாரி செய்ய மாட்டேன் என்று சொல்லிவிட்டதா? அனைத்திற்கும் சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டும் என்று சாதாரண மக்களுக்கு அட்வைஸ் செய்கின்ற இந்த அரசு இந்த விஷயத்தில் சாமிக்கும் கொஞ்சம் அட்வைஸ் பண்ணி, அதன் மூலம் கிடைக்கும் பணத்தை டெவலப்மென்ட்டு ஆக்டிவிட்டீஸ்க்குப் பயன்படுத்தலாம். ஏனென்றால் இங்கே உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்கிறோம் என்று சொல்லுகிறவர்கள். அவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். அந்தப் பணியில் இந்த அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற வாகனங்கள், ஆலயங்களில் செய்யப்படுவது என்பது பக்தர்களாலும், நம்பிக்கை உள்ள மக்களாலும் அவர்கள் விரும்பும் வகைக்காக கொடுக்கப்படுகின்ற தொகையில் இருந்து செய்யப்படுகிறது. ஆகவே அரசாங்கத்தின் வரிப் பணத்தையோ அல்லது பொதுப் பணத்தையோ எடுத்து இந்தத் தங்கத் தேர்கள், வெள்ளித் தேர்கள் செய்யப்படுவதில்லை. பக்தர்கள் விரும்பி அளிக்கிறார்கள். சாமிக்கு வேண்டும் என்று ஆசாமிகள் தருகிறார்கள். அவர்கள் தருவதை வைத்து அவர்கள் விருப்பப்படி காரியங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திரு. இரா. அமிர்தராஜ்: தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு குழு போடப்பட்டு அது பரிசீலித்ததாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் மீண்டும் சில அதிகாரிகள் கொண்ட ஒரு குழுவைப் போட்டுப் பரிசீலிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1980 பிப்ரவரி 11]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் முன்னாலேயே, தெரிவித்தேன். குறிப்பான குற்றச்சாட்டுக்கள் ஆதாரத்தோடு இருந்து, அதைத் தெரிவித்தால் அந்த அடிப்படையில் ஒரு குழுவை அமைத்து அரசு விசாரிக்க ஏற்பாடு செய்ய வசதியாக இருக்கும்.

திரு. சி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே வெள்ளித் தேரைக் குறித்துக் குறிப்பிடும்போது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. உமாநாத் அவர்கள் அது ஊதாரித்தனம் என்றும், அதை எதிர் கட்சித் தலைவர் அவர்களும் ஒத்துக் கொள்வார்கள் என்றும் கூறினார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்பதுதான்; எங்களை ஆளாக்கிய அண்ணா அவர்களின் கொள்கையும் அதுதான். எனவே இதற்கு நாங்கள் உடன்படவில்லை. வெள்ளித் தேர் போன்றவைகளை இந்த அரசு விரும்புகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளித் தேர் செய்வது இந்த அரசின் கொள்கை அடிப்படையிலே அல்ல என்பதை முன்னாலே தெரிவித்துவிட்டேன். பக்தர்கள் நிதிகளைச் தங்கமாகவும், வெள்ளியாகவும், பணமாகவும் தருகிறார்கள். அதை ஒரு சேரத் சேர்த்து பாதுகாப்பாக ஒரு உருவத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பேர்தான் வெள்ளித் தேர்.

[முற்பகல் 9-20].

திரு. கோ. இளங்கோவன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களே விடை சொல்லும்போது சாமிக்கு ஆசாமிகள் தருகிறார்கள் என்று சொன்னார்கள். திருச்செந்தூர் ஆலய வெள்ளித் தேரைப் பொறுத்த வரையில் சாமிக்கு ஆசாமிகள் தந்த தொகை எவ்வளவு? அறநிலையத் துறை தந்தது எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரமாக விடை தயாரித்துத் தர முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 106-ம் 107ம் மாண்புமிகு அமைச்சவரர்களின் வேண்டுகோளுக்கிணங்க பின்னால் எடுத்துக் கொள்ளப்பெறும்.